குருட்சேத்திரமாகிறது காந்தி

இராஜ்யம்!

பட்டினிப்பசி போக்க வக்கற்ற ஆளவந்தார்கள்

அடக்கு முறைகளுக்கு உள்ளாகிப் பெற்றுள்ள படிப்பினையை மறந்து நடப்பது ஏனோ?

'ஏன் என்றால் சிறைவாசம் இம் என்றால் வனவாசம்' இதுதானோ சுயாட்சி?

"பார்த்தா! கலக்கம் கொள்ளாதே! பந்துமித்திரர்கள் என்று பச்சாதாபப்படாதே! ஆசிரியர்கள் என்று அஞ்சலி செய்யாதே—அச்சம் அடையாதே! ஆருயிர் நண்பர்கள் என்று இரக்கம் காட்டாதே! சரமாரி பொழி—சர்வநாசம் செய்! இது உன் கடமை—நீ காவலன்!"

—கீதா போதனை

'விடாதே பிடி-அடி-சிறையில் தள்ளு! குத்து-வெட்டு-சுட்டுத் தள்ளு! நாயை அடிப்பது போல அடித்துத் தள்ளு! குருதியைக் கண்டு உறுதியை இழக்காதே!'

'உரிமை பேசுவர், உன் பக்தன் போல இருந்து விடு! நீதி கேட்பர், கோளாக்காதாக்கிக் கொள்! நேர்மைப் பொருள் தெரியுமா என்பர், நெஞ்சைக் கல்லாக்கிக் கொள்!'

'வாதடுவர், வாயைத் திறவாதே! வாழ்வு கேட்பர், பார்வையிலே பதில் அனுப்பு! மக்களாட்சிபா என்பர், கண்ணைத்துக் காட்டு!'

'இதோ பார் வேலூர் கழி—தாங்கி நிற்கும் காங்கேளப் பார்-இதோ பார் துப்பாக்கி—எனும் புக கூட்டையும் துளைத்துச் செல்லும் கொலைக் கருவி—தூக்கி நீட்டு மார்புக்கு நேரே—ஒரு கணத்தில் உயிரைப் போக்கி விடும்! உறுதி கொள்—உள்ளத்தை உருக்கிடும் போக்கு—யாரானும் உனக்கு இதுதான் தேவை, மறந்துவிடாதே!'

'மக்களை மக்களாக மதிக்காதே—மாபாதகம் அது! மாக்கட்டைகளாக மதித்துக்கொள்—நன்மாக்கம் இது! காவலன் கூறுக்கொள்ளவேண்டிய அதிகார அரிச்சுவடி இது!'

ஆம்! அதிகாரம், எவருக்கும், பல காலமாகப் புரிந்து வரும் போதனை இதுதான். இந்த அதிகாரத்தை ஒரு முறை ருசிபார்த்துவிட்டவர்கள், கள் காமம் எனும் இரண்டிற்கும் அடிமைப்பட்டவர்களைக் காட்டிலும், அதிகமாக, இந்த அதிகாரத்தை அடைய விரும்புவர். அதிகாரத்தை விட்டுவிட அவர்களாக முன்வரமாட்டார்கள். வேறு சக்திகள் வளர்ந்து, அதனை நீக்கும் வரையில், அதிகாரத்தின் அட்டகாசம் கட்டுக்காவலைக் கடந்துகொண்டுதான் இருக்கும். எனவே, அதிகாரத்தின் பிடியில் சிக்கி இருப்போர், அந்த அதிகாரத்தைக் கட்டிக் காப்பதிலே கண்ணும் கருத்துமாக இருப்பதோடு, அதிகாரம் எந்தச் சமயம் கை நழுவி விடுமோ என்று எப்பொழுதும் அச்சம் குடி கொண்டவர்களாகவே இருப்பர். அதிகாரத்தைக் காத்துக் கொள்ள விரும்பி இருப்போர், சிறு எதிர்ப்புக் கிளம்புவதைக் கண்டாலும் சகித்துக் கொள்ள மாட்டார்கள். என்றாவது ஒரு நாளைக்கு எதிர்ப்பு செய்வர் என்ற சந்தேகக் கண்களோடுதான், அதிகாரப் பிடியிலுள்ளோர், எல்லா மக்களையும் நோக்குவர். ஆகவே, பூஜா மனோபாவத்தைதான் அவர்கள் ஆதரிப்பரே யன்றி, புரட்சி மனோபாவம் கொண்டவர்களைக் கருவறுக்கவே கங்கணம் கட்டிக்கொண்டு, கிளம்புவர்—படையை ஏவுவர்—அதிகார ஆதிக்கத்தின் காப்புக்குப் பொதுமக்களைப் பெயர் கூறி, மனிதவர்க்க உரிமைகளைப் பறித்துப் பாவசமடைவர்.

இந்த அதிகாரத்தின் அங்க இலட்சணம் நன்கு உருவாக வருகிறது, ஆளவந்தார்களின் ஆட்சிப்போக்கிலே நாளாகவாக—இம்முறை காயாக இல்லை இது இன்று-கண்ணை உறுத்தும் அக்கோரக்காட்சியாக விட்டிருக்கிறது!

அகிம்சை—ஒரு வேளை இதற்கு முன் அவர்கள் நெஞ்சத்தில் இடம் பெற்றிருந்தாலும்—இன்று அறவே அஸ்தமித்து விட்டது. அதிகார அந்தகாரம் குடிகொண்டு விட்டது ஆளவந்தார்களின் உள்ளங்களிலே சிலரின் அறிவுரை—அறவுரை, இனி அவர்களுக்கு, மனமாற்றத்தை அளிக்காது.

நாட்டின் பாதுகாப்பு என்று பெயர்கூறி, பலரை, நீதிமன்றங்களைக் காணவிடாமலே, தள்ளி அடைத்தாகிவிட்டது சிறைகளில். குறைகளை எடுத்துக்கூறக் கூட்டம் போடும் உரிமைகளைப் பறித்தாகிவிட்டது. தொழிலாளர்களின் ஒற்றுமையை ஒழித்துக்கட்ட, எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டாகி விட்டது. புதிய தொழிற்சங்க முறை கண்டு, அதற்கு முத்திரையும் பொறித்தாகி விட்டது. தடையுத்தரவு, தடி, துப்பாக்கி, சிறை இவைகளை...

தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க

Phone No. 4502 Regd. No. M. 5458

விலை அரை அணா

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAIMANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (23—9—49) ❀ வெளியூர் (29—9—49) | இதழ் 50

அந்தத் திருவிழா இந்த ஆண்டு இல்லை

ஆளவந்தார்களுக்கு ஆமாம் கூற ஆட்டுமந்தைக் கூட்டம் இனியும் அவசியமா?

என்றுமே இல்லாமல் இருப்பது இன்பமளிக்கும்!

வருகிற டிசம்பர் மாதத்தில் நடைபெற வேண்டிய அனைத்து இந்திய காங்கிரஸ் மாநாடு, இந்த ஆண்டு தள்ளிவைக்கப்பட்டு இருக்கிறதாம். அந்த ஆண்டின் முதற்காலாண்டில் கூட்டப்படலாமென்று நம்பப்படுகிறதாம். புதிய விதிகளின்படி, அமைப்பு முறைகள் திருத்தப்படவில்லையாம் இன்னமும். எனவே, இந்த முடிவு எடுக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டதாம்.

இதுதான் உண்மையான காரணமோ, அல்லது நாட்டில் இருக்கும் செல்வ நெருக்கடியின் காரணமாகவும், தொழில்களில் ஏற்பட்டுள்ள குழப்பத்தின் பலனாகவும், பணமூட்டைகளின் பணம், இந்த மாநாடு கூட்டும் பணிக்குத் தாராளமாகக் கிடைக்காது என்ற பயந்தான் காரணமோ எவர் கண்டார்கள்?

ஏகாதிபத்தியத்தின் எதிர்ப்பு முகாமாக இருந்த காங்கிரஸ் இன்று பாசீசப் பாதுகாப்புப் படையாக மாறி இருக்கும் அற்புதத்தை அறியாதவர்கள் இருக்க முடியாது. தியாகிகள் கோட்டம் இன்று பதவி வேட்டையாடும் பதர்களின் பதுங்கும் குகையாகக் காட்சியளிப்பதை எவர் அறியார்? அகிம்சா தத்துவத்தால் தனித்த தகுதி பெற்றிருந்த ஸ்தாபனம், இன்று ஆயுதம் தாங்கும் ஆர்ப்பரிக்கும் ஆசாமிகளின் அரங்கமாக உருவெடுத்து இருப்பதை அறியாதவர் எவர்? உரிமை வேட்கை உருக்குலைக்கப்பட்டு இன்று உரிமை பறிக்கும் பெரும் பணியில் ஈடுபட்டுள்ள காங்கிரசின் திருவிழாவை எவர் மதிப்பர்? காங்கிரசால் நாட்டுக்கோ, சாதாரண மக்களுக்கோ கிடைக்க இருப்பது நன்மையா? இல்லையே, நாசந்தானே!

எனவே, ஆளவந்தார்களின் அதிக்கிரமத்திற்கு கலவரம், வங்காளத்துவம், மக்களின் சுகவாழ்வினை சீரழிக்கும் செயல் புரியும்—காந்தியார் இல்லாத—காங்கிரஸ் குறித்த காலத்தில்—மாநாட்டைக் கூட்டிவில்லை என்னவே திருவிழா தள்ளிப்போட்டாலதான் என்ன? என்றுமே கூட முடியாத நிலையில், இனிமேல் காங்கிரஸ் மாநாடு நின்றால் தினத் திருநாளாக் செய்ய...

...டால்கூட, அதனை வரவேற்கவே செய்வர் அறிவுடை மக்கள்—இந்த நாடு சீர்படவும், இந்த நாட்டில் மக்களாட்சி மலரவும், சமதர்மக் கோட்பாடு தழைத்தோங்கவும், முதல்முதலாகச் செய்யப்பட வேண்டிய கடன், காங்கிரஸ் ஸ்தாபனத்திற்கு சீட்டுக் கொடுக்க வேண்டியதுதான். அன்றுதான் இந்நாட்டில், அறிவுவளரும்-கல்வி பரவும்—செல்வம் பெருகும்—தொழில் வளரும்—இல்லாமை தொலையும் வறுமை அகலும்-சந்தோஷம் நிலைத்து நிற்கும். இதற்கு மக்கள் கொடுக்கவேண்டிய விலை, காங்கிரஸ் பாசிச தாபனத்தைத் தொலைத்துத் தலைமுழுக வேண்டியதுதான்.

களவை கண்டுபிடிக்கக் கடவுள் துணை செய்யவில்லை

கள்வனிடம் கடவுளுக்கு அச்சமோ!

திருப்பதி சத்திரத்தில் பக்தர் ஒருவரிடம் ரூ. 10,000 மதிப்புள்ள பொருள்கள் களவாடப்பட்டன. களவாடியவர்கள் தேவஸ்தான சிப்பந்தி ஊழியர்களான மூவராயிருக்கலாம் என எண்ணி அம்மூவரையும் கைது செய்து விசாரணை நடத்தியபிறகு, அம்மூவரும் குற்றமற்றவர்களென விடுதலை செய்யப்பட்டனர். களவுபோனவைகளைக் கண்டுபிடிக்கக் கடவுள் திருப்பதி வேங்கடாசலபதி கருணை காட்டவில்லை; துணை செய்யவில்லை.

கள்வனைக் காட்டிக் கொடுத்தால் தமக்கேதாவது ஆபத்து வருமோ எனக் கடவுள் அஞ்சுகிறார் போலும்!

காங்கிரசில் :: கள்ளமார்க்கட்

கிழக்குப் பஞ்சாப் மாகாணக் காங்கிரஸ் கமிட்டியில், கள்ள மார்க்கட்டுக்காரர்கள், சந்தர்ப்பவாதிகள் முதலியோர் சேர்க்கப்பட்டிருப்பதாக ஒரு காங்கிரஸ்காரர் உண்ணாவிரதம் துவக்கியுள்ளார்.

இன்று காங்கிரஸ் (மாகாணச்) சபைகள் அவ்வளவிலும் கள்ளமார்க்கட்டுக்காரர்களையும், சந்தர்ப்பவாதிகளையும் நீக்கிவிட்டால் கட்சி ஏது? சட்டசபைகள் ஏது? கட்டுப்பாடான பெரும்பான்மைச் சக்தி ஏது? அரசாங்கம் காங்கிரஸ் கட்சி ஆட்சியாக இருப்பது எப்படி? என்பவைகளை அந்த உண்ணாவிரதி கவனிக்கவில்லை. அவர் வெறும் லட்சியவாதிபோலும்! இல்லையெனில், காங்கிரசுக்குள் பதவி பெறுவதற்கும் அபேட்சகர்களாக ஆவதற்கும்கூட இலஞ்சம் தரப்படுவதும், கள்ளமார்க்கட் நடைபெறுவதுமான சாதாரணமான விஷயம் அவருக்கு ஏன் தெரியவில்லை.

எவ்வளவுக்கெவ்வளவு பெரிய காங்கிரஸ் கொடி வீட்டின் மீது பறக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு சிறப்பாகக் கள்ளமார்க்கட் வேலையை அவ்வீட்டுக்குடையோர் நடத்துவார் என்பது மக்களிடையே சாதாரணமாகப் பரவியுள்ள விஷயமாயிற்றே!

காங்கிரஸ் அப்படியல்லவென்றால், கள்ளமார்க்கட்காரர்களைத் தூக்கிலிடவேண்டுமென்று கர்ஜித்த முதலமைச்சர் நேரு இருக்கிறாரே! அவரும் இந்த நிலைமைகளையெல்லாம் தெரிந்தும் பேசாமல்தானே இருக்கிறார். பேசாமல் இருந்தால்தானே காங்கிரசின் கவுரவமும் கட்டுப்பாடும் தளராமல் இருக்கும்! அப்படியிருக்கப் பாவம் இந்த உண்ணாவிரதி இவற்றை யெல்லாம் அறிந்துகொள்ளாமல் உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கியுள்ளது கண்டு அவர் மேல் இரக்கம் ஆகிறதே.

மாலை மணி

சென்னை 28—9—49 புதன்கிழமை

கண் துடைப்பு வேலை!

ஒரே நாடு—ஒரே இனம்—ஒரே பண்பாடு! எனினும் மக்களிடையே பேதங்கள்! அதுவும் பிறப்பினாலே குறிக்கப்படும் பேதங்கள்! இந்த விசித்திர நிலை, உலகில் மற்றெந்தப் பகுதியிலும் காணப்படாத வகையில், இந்நாட்டில்—இவ்வுபகண்டத்தில் - இருந்தது; இருந்து வருகிறது. இருந்தது—இன்று நேற்று என்ற அளவில் அல்ல, ஆயிரம், ஆராயிரம் ஆண்டுகளாக

பிறப்பினால் பேதங் கற்பிக்கும் முறை, வேதத்தில் காணப்படவில்லை, உபநிஷத்து சொல்லவில்லை, மகேசுவரன் அருளவில்லை, மாமுனி உபதேசிக்கவில்லை என்றெல்லாம் விளக்கவுரை தந்து, சமுதாயத்திலே ஏற்பட்டுள்ள கறையை மறைக்க, ஆச்சார்ய சிரோமணியிலிருந்து, ஆற்றங்கரைச் சவுண்டிவரையில் இந்நாளில் அரும்பாடுபடுகின்றனர். இந்நாட்டில் பிறப்பினால் வேறுபாடு உணர்த்தப்பட்டு, ஒரு பிரிவு மற்றொரு பிரிவை அழுத்தவும், அந்தப் பிரிவை வேறொரு பிரிவு அழுத்தவும். - ஆன சமுதாய அடுக்குமாளிகை எழுப்பப்பட்டதற்குக் காரணம், இந்நாட்டில் உலாவ விடப்பட்ட தனிரகக் கடவுள் உணர்ச்சித் தன்மையும்-மதபோதனையும் - புரோகிதக் குறும்பும் - அநீதி முறையுமேயாகும் என்பதை யாரும் மறுக்க இயலாது. சுருங்கச் சொல்ல வேண்டுமானால், பிறப்பினால் பேதங் கற்பிக்கும் பெரிய 'சாதனை' யைச் செய்து காட்டிய 'பெருமை' அனைத்தும் 'இந்து மதத்'தையே சார்ந்ததாகும்!

'இந்து மதம்' தீண்டாமை என்னும் ஈட்டி கொண்டு, மக்களிலே உழைக்கும் பிரிவினரைக் குத்தி, சமுதாயத்தின் அடித்தளத்திலே இருத்தி வைத்த காரணத்தால்தான், தீண்டப்படாதவர்கள்-தாழ்த்தப்பட்டவர்கள்—என்ற ஒரு பிரிவு ஏற்படும் நிலை தோன்றிற்று. மனிதப் பண்பு படைத்த சிலர் தீண்டாமைக் கொடுமை தவிர்க்கப்பட்டு, தாழ்த்தப்பட்டவர்களும் மக்களோடு மக்களாய்க்கலந்துவாழவேண்டும் என்று சென்ற 30 ஆண்டு காலமாக முயன்றனர். தீண்டப்படாதவர்களைத் தீண்டப்படாதவர்களாகவே வைத்திருக்கவேண்டும் என்று எண்ணியிருந்த செருக்குடையாரின் சிந்தையிலே, மாற்றம்—மனிதனை மனிதன் என்று நினைக்கும் மாற்றம் — காணவேண்டி, தமிழகத்தைப் பொறுத்தவரையில், பகுத்தறிவியக்கத்தினர் பாடுபட்டனர். ஓரளவுக்கு வெற்றியும் பெற்றனர்; வெற்றி பெற்றுக்கொண்டும் வருகின்றனர்.

தாழ்த்தப்பட்டோர் மற்ற உயர் வகுப்பினரைப்போல், வாழும் நிலை எய்தவேண்டுமானால், அவர்கள் மீது ஏற்றப்பட்டிருக்கும் இழிவும் நீக்கப்படவேண்டும்; பொருளாதாரத்திலே அவர்கள் தாழ்ந்திருக்கும் தாழ்வும் போக்கப்படவேண்டும். தாழ்த்தப்பட்டோரைப்பற்றி, மற்றவர்கள் கொண்டிருக்கும் இழிவு மனப்பான்மையைத்தான், பகுத்தறிவு இயக்கத்தாரால் ஓரளவுக்குப் போக்க முடிந்தது; போக்க முடியும். பொருளாதாரத்திலே அவர்கள் நிலை உயர்த்தப்படவேண்டுமானால், பொருள்வளம் மிகுந்த அரசாங்கந்தான் முன்வரவேண்டும்; முன்வர முடியும். இந்த முறையில், அரசாங்கம் தன்னுடைய கடமையைச் செம்மையுற ஆற்றிவருகிறதா என்பதைக் கவனிக்கவேண்டும்.

காந்தியாரின் சீடகோடிகள் ஆட்சிதான், இந்தியத் துணைக் கண்டம் எங்கும், இன்று ஏகக் கொடி கட்டி இயங்கி வருகிறது. இந்து மதத்தையும், இந்து மதக் கருத்துக்களையும் ஒரு பக்கத்தில் ஆதரித்துக் கொண்டு, தாழ்த்தப்பட்டோர்க்கு "ஹரிஜனங்கள்" என்ற பெயரைக் கொடுத்துக் கொண்டு இதோபதேசம் புரிந்துவந்தார் காந்தியார். தாழ்த்தப்பட்டோரின் நிலை உயரவேண்டும் என்று உண்மையிலேயே ஆசைப்பட்டார், அவர்களை உயர்த்திவைத்தே அழைத்துப்பார்த்தார். ஆனால் அவரின் சீடகோடிகள் "ஹரிஜனம்" என்ற சொல்லிடத்தே, தமக்கும் பற்றுதல் இருக்கிறது என்று காட்டிக்கொள்ள, பல முறைகளையும் கையாண்டு வருகிறார்களேயன்றி, சமுதாயத்திலே அவர்களை மற்றவர்களோடு இரண்டறக் கலக்க வழிவகைகளை முறையோடு செய்வதாகத் தெரியவில்லை.

பம்பாய் அரசாங்கம், தாழ்த்தப்பட்டோர் நாள், அதாவது காங்கிரஸார் கூற்றிலே சொல்லவேண்டுமானால், "ஹரிஜன தினம்" என்று கொண்டாடியிருக்கிறது. அந்த நாளையொட்டி, பம்பாய் காங்கிரஸ் மேயரான தோழர் எஸ். கே. பட்டீல், ஒரு கூட்டத்தில் பேசும்போது, "2000 ஆண்டுகளாக ஹரிஜனங்கள் அனுபவித்து வந்த கொடுமைகள் அனைத்தும் அகற்றப்பட்டுவிட்டன" என்று கூறியுள்ளார். அவர் ஒரே சமயத்தில தன்னையும் ஏமாற்றிக்கொள்கிறார்; கேட்போரையும் ஏமாறச்சொல்கிறார்! கொடுமைகள் அனைத்தும் அகற்றப்பட்டுவிட்டன-ஏட்டிலே, சட்டத்திலே அகற்றப்பட்டிருக்கலாம்,நாட்டிலே அகற்றப்பட்டு விட்டனவா? காங்கிரஸ் தலைவர்கள் சிலருடைய உள்ளத்திலிருந்து அகற்றப்பட்டு விட்டனவா? காங்கிரஸைச்சேர்ந்த மிட்டா, மிராசு, சாதி இந்துக்கள் உள்ளத்திலிருந்து அகற்றப்பட்டு விட்டனவா? சேரிவாழ்வோர் வாழ்விலிருந்து அகற்றப்பட்டு விட்டனவா? இல்லை! இல்லை!! இல்லை-இதை நாம் கூறுகிறோம் என்று நினைக்காதீர்கள்; தோழர் எஸ்.கே. பட்டீலே தொடர்ந்து பேசும்போது, தீண்டாமைக் கொடுமைகள் இன்னும் இருந்து வருவதைக் குறிப்பிட்டு விட்டு, அதை அகற்ற வேண்டும் என்று கூறுகிறார். முன்னுக்குப் பின் முரண்படுகிறது! என்னே விந்தை! இப்படிப்பட்ட விந்தைகள் காங்கிரஸ்காரர்களிடத்திலே சர்வ சாதாரணமாக நிகழ்கின்றன. அது அவர்கள் இயல்பு போலும்!

தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்திற்கு என்று அரசாங்கத்தால் ஒதுக்கிவைக்கப்படும் பொருள், ஒரு குறிப்பிட்ட உயர் வகுப்பினரால் ஆங்காங்கு கரைக்கப்பட்டு வருகின்றதேயன்றி, அவர்கள் முன்னேற்றத்திற்குப் பயன்பட்டு வருவதாகத் தெரியவில்லை, ஆங்காங்கிருந்து கிடைக்கின்ற தகவல்களிலிருந்து. தாழ்த்தப்பட்டோர்க்கு என்று செலவிடப்படும் சிறு தொகையும், அவர்களைத் தனியே பிரித்துவைத்துத்தான் செலவழிக்கும் முறையை அரசாங்கம் கைக்கொண்டிருக்கிறது.

"ஹரிஜன ஹாஸ்டல்", "ஹரிஜனப் பள்ளி" "ஹரிஜன காலனி" என்று அவர்களைத் தனியாகப் பிரித்துக் காட்டும் முயற்சி, அவர்களை மற்ற மக்களோடு கலந்து பழகும் வாய்ப்பை மறுத்துவிடுகிறது. தாழ்த்தப்பட்டோர்க்கு கல்வி, உத்தியோகம், தொழில் போன்ற வாழ்க்கை வசதிகளை அவர்கள் ஓரினமாகச் சேர்ந்து முன்னேறும் வகையில் தேவையான அளவுக்குச் செய்யவேண்டும்; அந்த வசதிகளைத் தனியே பிரிந்திருந்து பெறாமல் மற்றவர்களோடு இணைந்திருந்தேபெற வாய்ப்பு அளிக்கவேண்டும். மற்றவர்கள் பயிலும் பள்ளியில்தான் தாழ்த்தப்பட்டோரும் பயில வேண்டும்; அவர்களுக்கு உதவிச் சம்பளமும் அளிக்கப்பட வேண்டும். மற்றவர்கள் உண்ணும் உணவு விடுதிகளில் தான் தாழ்த்தப்பட்டோரும் சேர்க்கப்படவேண்டும்; இலவச உணவு அவர்களுக்கு அளிக்கப்படவேண்டும். மற்றவர்கள் வாழும் இடத்தில் தான் தாழ்த்தப்பட்டோரும், வாழவேண்டும்; அதற்கான வசதி செய்து தரப்படவேண்டும்.

காங்கிரஸ்காரர்களில் பலர் ஹரிஜனத்தொண்டாக இங்கு நடத்திக் காட்டுவது என்ன வென்றால், சேரியில் சென்று தெருக்களை ஒரு நாளைக்குக் கூட்டுவது; சேரி வாழும் சிறுவர்களுக்கு எண்ணெய்தேய்த்துக் குளிப்பாட்டிவிடுவது, நூல் நூற்றுக் காண்பிப்பது, காந்தியாரின் பெயரை உச்சரித்துக் காட்டுவது, போன்றவையேயாகும். தீண்டாதாரின் நிலைமை உயர்ந்த அரசாங்கத்தால்தான் இயலும்; அதை உண்மை வழி நின்று ஆற்ற நேர்மை அரசாங்கம் முற்பட வேண்டும்.

தீண்டாமையும், தாழ்ந்த நிலையும் நிலைபெற்றிருக்க, எங்கெந்த சாதனங்கள் அடிப்படைக் காரணமாக அமைந்திருக்கின்றனவோ, அந்தச் சாதனங்கள் அனைத்தும் மாற்றப்படவேண்டும்; தேவையானால் அழிக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் தீண்டாமையும் தொலையும், தாழ்ந்த நிலையும் போகும். அல்லதில்லாமல், 'ஹரிஜன காலனி'யில் நூற்பு யக்ஞம் நடத்துவதோ, சேரியைக் கூட்ட ஒருநாள் காங்கிரஸ்காரர்கள் செல்லுவதோ, தாழ்த்தப்பட்டோர்க்கு ஒரு நாளைக்கு எண்ணெய் சீக்காய் வழங்குவதோ, அவர்களுக்கு பழைய கந்தல் ஆடையை வாங்கி அளித்துவிடுவதோ கண்துடைப்பு வேலையாகுமே ஒழிய, காரியமாற்றும் பணியாகாது!

உலகக் கூடம்

['சம்மட்டி']

இன்று காலை வந்த ஆங்கிலப் பத்திரிகை ஒன்றை கருத்தாகக் கவனித்துக்கொண்டுஇருந்தேன். சோவியத் நாட்டிடமும் அணுகுண்டு இருக்கிறது என்று அமெரிக்கத் தலைவர் கூறினதை சோவியத்செய்தி ஸ்தாபனமான 'டாஸ்' ஆமாம் என்று கூறினதையும், இரு வல்லரசுகளிடமும் அணுகுண்டு இருக்கிறது என்னும் காரணத்தால், அமெரிக்காவின் முடுக்கில் கொஞ்சம் தளர்ச்சி ஏற்பட்டிருப்பதையும், நிருபர்கள் தீட்டியுள்ள எழுத்தோவியத்தில் கண்டு, போர் ஏற்பட்டு விடுமோ என்று இன்னும் சில நாளைக்குப் பயப்படத் தேவை இல்லை என்றுதீர்மானித்தவனாகச் சந்தோஷப் பட்டுக் கொண்டு இருந்தேன்.

காஷ்மீர் பிரச்சினையைத்தீர்க்க வந்த ஐக்கிய நாடு கமிஷன், பாக்கிஸ்தான்—இந்தியாவிற்கு இருந்துவரும் மனக் கசப்பைப் பெரிதாக்கி விட்டதோடு, வேறு சிக்கல்களையும் தோற்றுவித்து விட்டு, எந்த முடிவும் காணமல், வெளியேறி விட்டது என்பதையும் படித்தேன் பத்திரிகையில்.

காஷ்மீர் சிங்கம் ஷேக் அப்துல்லாவின் கர்ஜனையும், ஜவஹரின் சமரச கீதமும், தன் தாய் வீட்டுப் பெருமையை உடன் பிறந்தானிடமே கூறுவதுபோன்ற ஜவஹர் கூறிய தாம் பிறந்த காஷ்மீரின் அருமை பெருமைகளையும், ஐக்ய நாடு சபையைக் கவைக்குதவாத சபை என்று கண்டித்துப் பேசிய வரவேற்புக் கழகத் தலைவரின் வாயுரையையும், விளக்கமாகப் போடப்பட்டிருந்ததையும் பார்த்தேன். பலமான பிரசாரத்தின் முன், நீதி இக்குமுக்காட்டத்தான் நேரும் என்பதையும் உணர்ந்துகொண்டேன்.

ஐக்யநாடு சபையில் இந்தியாவின் பிரதிநிதி பி. என். இராவ், அகிம்சா கோட்பாட்டை அடிப்படையாக் கொண்டும், காஷ்மீர் சம்பவத்தில் இந்தியாவின் நடவடிக்கையை மறந்தும், உலக அமைதியை ஏற்படுத்த வேறு நடுவழி வகுக்க முனைந்திருக்கும் முயற்சியையும் படித்துப்பார்த்து பரமானந்தம் அடைந்தேன். பிரசார இயந்திரம் எவரிடமிருக்கிறதோ, அவர்களால் ஒரு அணுவையும் அண்டமாக மாற்றமுடியும் என்பதை அறிந்தேன்-வியந்தேன்!

பிரிட்டனின் ஏகாதிபத்திய மனவளம் மறைந்து, உண்மையான மக்களாட்சி மலருவதைக் காணச் சகிக்காமல்தான் அமெரிக்கா, இங்கிலாந்தில் சமதர்மப பயிர் வளருவதைத் தடுக்கிறது என்று கூறப்பட்டுள்ள காரணத்தையும், இங்கிலாந்தில் பரீட்சிக்கப்படும் சமதர்மம் வெற்றியடைவதினால், அமெரிக்க மக்களின் மனதில் புது உணர்ச்சி — முதலாளித்துவத்தை முறியடிக்கும் நிலையில் — ஏற்பட்டுவிட்டால் என்ன செய்வது என்ற அச்சத்தின் காரணமாகத்தான், இங்கிலாந்தின் புது வாழ்வு முயற்சியை முளையிலேயே கிள்ளி எறிய, அமெரிக்கா, பொருளாதார நெருக்கடியை இங்கிலாந்தின் தொழிலாளர் ஆட்சியின் மீது வலுக்கட்டாயமாகச் சுமத்துகிறது என்ற ஆராய்ச்சி எழுத்துகளையும், வாசகர்கள் கவனத்தை உடனே கவராத இடத்தில், பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருப்பதிலிருந்து, படித்துப் பரவசமடைந்தேன். அமெரிக்காவின் ஆதிக்க வெறியின் தன்மையை அறிந்து ஆத்திரம் கொண்டேன்!

இந்த நாட்டில் அன்னியர் முதல் போட்டுத்தொழில் நடத்துவது குறித்து, அந்தப் பத்திரிகை ஆசிரியர், அதிக உற்சாகத்தோடு ஆதரித்து எழுதியிருந்த தலையங்கத்தில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கும் பொழுது, 'சார்! சார்!' என்ற குரல்கள் என் காதுகளில் விழுந்தன. சற்றுக்கோபமாகத்தான் திரும்பி நோக்கினேன் சத்தம் வந்த திக்கை. கோபம் மேலும் அழுத்தம் பெறவில்லை, என்னைக் கூப்பிட்ட ஆசாமியைக் கண்டதும் எனக்கு அறிமுகமான, ரிக்ஷாக்கார பக்கிரியின் குரல் தான் அது!

'என்னடா பக்கிரி!'

"ஒண்ணுமில்லிங்க எஜமான். எம்பொண்சாதி பொன்னி பேரும், மவ மங்கம்மா பேரும், பொடுசு சாத்தான் பேரும், இந்த இங்கிலீஸ் பத்திரிகேலே இருக்குங்களாண்ணு, கொஞ்சம் பார்த்துச்சொல்லுங்க" என்றான் பக்கிரி.

'என்னடா பக்கிரி! பயித்தியம்கியித்தியம் பிடிச்சுக்கிட்டிருக்கா உனக்கு!'

'இல்லெ எசமான்! எங்கக் குடும்பப் பேரெல்லாம் ஒண்ணு விடாமெ போட்டிருக்கணும் பேப்பரிலே!' என்றான் பக்கிரி.

'என்னடா என்ன கேலி கிலி பண்ணறையா? ஏண்டா பக்கிரி! நீ என்னடா சொல்றே? ஒன்றும் விளங்கிலயேடா!'

'என் பொண்சாதி வாரத்துக்கு நான்கு நாளுதான் சாப்பிடுறா! அதுவும் அரை வயிறு கால் வயறுதாஞ் சாமி! பொடுசுகளும் அதுபோலத்தான்! நானும் அப்படித்தான்!' என்றான் பக்கிரி.

'உன் குடும்பம்மட்டுமாடா இந்த மாதிரி இருக்குது இந்தப் புண்ய பூமியில்? நூற்றுக்கு எழுபது எண்பது மக்கள் இப்படித் தாண்டா மிருகமாட்டம் வாழறாங்கடா!'........

'அது சரிடா! இதுக்கு ஏண்டா பத்திரிகையிலே உங்க பேரை போடுவாங்க?'

'இங்கிலீஸ் பத்திரிகை படிக்

[தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க]

கருவூலத்திற்கு மட்டுமல்ல - கருத்துக்கும் புதிய மதிப்பீடு தேவை

பள்ளிப் படிப்புக்கும் நாட்டு நடப்புக்கும் ஒருமைப்பாடு வேண்டும்

அறிவு வளர்க்கும் பொருட்காட்சிகளை மாணவர்களே நடத்தவேண்டும்

அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆங்கிலப் பேரவையில் அண்ணாத்துரை சொற்பொழிவு

அண்ணாமலைநகர், செப். 21—

இன்று மாலை 3-30 மணிக்கு தோழர் சி. என். அண்ணாதுரை, தோழர்கள் மதியழகன், முல்லைக்கொம்மை சத்தி ஆகியோருடன் சிதம்பரம் வந்து சேர்ந்தார். புகைவண்டி நிலையத்தில் ஏராளமான மாணவத் தோழர்களும், நகர கழகப் பிரமுகர்களும் வந்து மாலையிட்டு, வரவேற்று, வாழ்த்தொலி கூறினர். நிலையத்திலேயே புகைப்படம் எடுக்கப்பட்டது. பிறகு 4-30 மணிக்கு ஆங்கிலப் பேரவையினர் நடத்திய விருந்திலும், எடுத்த புகைப்படத்திலும் கலந்துகொண்டு, மாலை 5 மணிக்குத் துணைவேந்தர் மணவாள இராமானுசம், பேரவைத் தலைவர் கலியபெருமாள், செயலாளர் பிஸ்மி' லாக்கான் ஆகியோருடன் கூட்டம் நடந்த பட்டமளிப்பு விழா மண்டபத்திற்கு வந்து சேர்ந்தார். அப்பெருமண்டபம் நிறைய பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும், மாணவர்களும், மாணவிகளும், நகரத்து மக்களும், குடந்தை, புவனகிரி, விழுப்புரம், கடலூர், மாயவரம், கும்பகோணம் போன்ற ஊர்களிலிருந்து வந்திருந்த இயக்கத் தோழர்களும் கூடியிருந்தனர். பெருத்த ஆரவாரத்துடன் சொற்பொழிவாளரை வரவேற்றனர்.

துணைவேந்தர் பேச்சு

தோழர் கனகராசன் குறள் பாட, கூட்டம் தொடங்கியது. முன்னுரையாகத் துணைவேந்தர் சில வார்த்தைகள் கூறினர். அதன் சுருக்கம்: அண்ணாதுரை உங்களுக்குப் புதியவரல்லர். மாணவரிடையே செல்வாக்குப் பெற்றவர்: அவர் திறமைமிக்க எழுத்தாளர், பேச்சாளர். ஆகவே அறிமுகம் தேவையில்லை. அவர் கருத்துக்கள் புரட்சி கலந்தவை. சமூகத்தைத் திருத்த முயல்கின்றவர். அவருடைய கருத்துக்கள் நமக்குப் பிடிக்கின்றனவோ இல்லையோ அத்தகைய கருத்துரைகளை நாம் கேட்க வேண்டும். சிந்திக்க வேண்டும்" என்று கூறி தோழர் அண்ணாதுரையைப் பேசும்படி அழைத்தார். அலையோசை போன்ற கைதட்டுதலிடையே தோழர் அண்ணாதுரை பேச்சு ஆரம்பமாயிற்று. அவர் பேசியதன் சுருக்கம் வருமாறு:—

கேளுங்கள்: நம்பிவிடாதீர்

"துணைவேந்தர் அவர்களே, நண்பர்களே! நம் அறிவு சான்ற துணை வேந்தர் அவர்கள், முன்னுரையிலே குறிப்பிட்டார், என்னுடைய கருத்துக்கள் பிடித்தாலும், பிடிக்காவிட்டாலும் அவைகளைக் கூர்ந்து கேட்கும் மனப்பான்மை வேண்டும் என்று! அது தான் என் விருப்பமும். பேச்சாளர்கள் பேசுவதையெல்லாம் மக்கள் உடனுக்குடன் நம்பி விட்டால், என் கருத்தும், எண்ணமும் தான் பாழாகும். ஏனெனில், எனக்குப் பின்னால் எத்தனையோ பேச்சாளர்கள் வரலாம். பேசலாம். பேச்சாளர்கள் பேச்சையெல்லாம் நம்புவது என்றால் அவர்கள் என் கருத்தை மாற்றி விடலாம். ஆகவே எதையும் கேட்க வேண்டும்,

ஆனால் உடனே நம்பிவிடக் கூடாது என்றே நான் விரும்புவதும் வேண்டுவதும்! என்னைப் பேரவைச் செயலாளர் அழைத்த போதும், அதுவும் ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்று கேட்டுக்கொண்ட போதும் நான் மறுத்தேன். ஏனெனில், இன்று மாலை உங்களிடம் பேச முடியாத நிலையில், வேறு பல வேலைகளில் ஈடுபடவேண்டியிருந்ததால் தான். மேலும் மக்களைத் திருத்தத் தாய்மொழியிலேயே பேசுவதுதான் சிறந்த வழி எனக் கருதி தமிழிலேயே அடிக்கடி பேசுவது என் பழக்கம். சில பல நேரங்களில் அபூர்வமாக ஆங்கிலத்தில் பேசுவதுண்டு, ஆனால் என் ஆங்கிலம் அபூர்வமானதல்ல! செயலாளர், தலைப்பென்ன என்று கேட்டபோது, நான் எதையும் சொல்லவில்லை. சிறிது நேரத்திற்கு முன்னால் துணைவேந்தருடன் உரையாடிக்கொண்டிருந்தபோது, 'புது மதிப்பீடு' (New Valuation) என்ற தலைப்பிலே பேசலாம் என்றிருக்கிறேன், எனக் கூறினேன்.

கருத்துக்கு மதிப்பீடு

இரண்டு தினங்களாக இந்த 'மதிப்பீடு' என்ற வார்த்தைக்கு உலகத்திலே அதிக மதிப்பு! கிரிப்ஸ் செய்த திடீர் மாற்றந்தான் இதற்குக் காரணம். பொருளியலிலே அவர் செய்த குறைப்பு 'மதிப்பீடு' என்ற திட்டத்தினால் ஏற்பட்ட பரபரப்பு. அது பணத்தைப் பொறுத்தது! ஆனால் கருத்துக்களைப் பற்றிய புது மதிப்பீடு வேண்டும் என்கிறேன் நான்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் இந்தியாவிற்கு இருந்த மதிப்பு வேறு. ஆங்கிலேயரின் பிடியிலிருந்தபோது அதன் மதிப்பு குறைவு. அகில உலக மார்க்கட்டிலே இன்று மதிப்பு உயர்ந்துவிட்டது. எல்லா நாட்டுத் தூதுவர்களும் பேசுகிற நேரத்தில் இந்தியாவை முன்னர் மதிப்பிட்டதைப் போலக் குறைத்து மதிக்கவில்லை. இப்பொழுது இந்தியாவின் மதிப்பு உயர்ந்துவிட்டது. காலமும், சூழ்நிலையும் மாறுவதைப்போல நாட்டின் மதிப்பும் மாறுகிறது. நாடு மட்டுமல்ல, பணம் மட்டுமல்ல, கருத்துகளும் மதிப்பைப் பெறுகின்றன, இழக்கின்றன.

பழையகால மதிப்பீடு

கடவுள், மதம், நாடு, இனம், கல்வி, அரசியல் என்ற இவைகளைப் பற்றிப் பழங்கால மனிதன் போட்ட மதிப்புக் கணக்கிற்கும், இன்றைய மதிப்பிற்குமுள்ள வேற்றுமைகளை உணரவேண்டும். இங்கிலாந்திற்கு அமெரிக்கா தெரியாதிருந்த நேரத்தில், நெப்டியூன் சாதாரண கிரகமாக இல்லாமல், கடவுளாக இருந்த நேரத்தில், ஆஸ்திரேலியா நம் கண்களில் படாதிருந்த காலத்தில், அதாவது வரலாறு எழுதப்படாத நேரத்தில், மனிதன் கடலைப் பார்த்தான்; அலையைக் கண்டான்; இயற்கை விநோதங்கள் அத்தனையும் பார்த்தான்; வியந்தான்! புலி மானைக் கொல்லும்போதும், சிறுத்தை தாவிப் பாயும்போதும், நாகம் சீறியாடும்போதும் மனிதன் அஞ்சினான்! ஆனால் இதற்கெல்லாம் ஒரு உயர்ந்த சக்தி, எட்டாத வானத்திலே, மேகத்திடையிலே மறைந்திருக்கிறது என்று கற்பனை செய்தான்; நம்பினான். நம்பிக்கையை வளர்த்துக்கொண்டான். அந்தக்கால மனிதன் கடவுளை அப்படித்தான் மதிப்பிட்டான். புராதனகால மனிதனின் கடவுள், அச்சத்திலும் ஆச்சரியத்திலும் அடிப்படை அமைத்துக் கட்டப்பட்டிருந்ததாகும் என்று சிந்திப்பவர்கள் ஒப்புக்கொள்வார்கள். ஆனால் இன்று கடவுளை அப்படி மதிப்பிடவில்லை. அவரைப்பற்றிச் சந்தேகிப்பதே பாவம் என்ற நினைப்பு போய்விட்டது. இப்பொழுது நாமும் ஆண்டவன் ஆலயத்திற்குச் செல்கிறோம், துணைவேந்தரின் தனியறையில் நுழைகிற மாணவனைப்போல.

நம் குறைகளைக் கேட்பார், தீர்ப்பார் என்ற எண்ணத்துடன் ஆலயத்தினுள் நுழைகிறோம். நாம் ஆண்டவனை நல்லெண்ணமுள்ள நம் பாதுகாவலர் (Benevolent Policeman) என்று கருதுகிறோம். நாம் துன்பங்களால் தாக்கப்படுகிறபொழுது, துயர் துடைக்கும் தீரராக, குறைகள் உள்ளபொழுது அவைகளைத் தீர்த்துவைக்கும் நீதிபதியாக, இல்லாமையால் வருந்தும்பொழுது அதை விரட்டிடும் வள்ளலாக மதிக்கிறோம். ஆதிகால மனிதன் கடவுளுக்குக் கொடுத்த மதிப்பிற்கும், நாம் கொடுக்கிற மதிப்பிற்கும் வேறுபாடு உண்டு.

பழங் கருத்துக்கு மதிப்பு குறைந்துவிட்டது

மதத்தை எடுத்துக்கொண்டாலும், அதை ஆட்டிப் படைக்கும் பூசாரிக் கூட்டத்தை எடுத்துக்கொண்டாலும், ஆதிகால மதிப்பும், தரமும் இப்பொழுது கெட்டுவிட்டது, குறைத்து மதிப்பிடும் மனப்பான்மை வளர்ந்துவிட்டது.

அன்று மன்னரும் பிறரும் மண்டியிடும் நிலைமை யிருந்தது, இரேக்க தேசத்திலே, ரோம் நாட்டிலே, வாழ்ந்த குருமார்களுக்கு அன்றிருந்த மதிப்பும், செல்வாக்கும் அமோகம். ஒரு நாட்டு இளவரசிக்கும் இன்னொரு நாட்டு மன்னனுக்கும் மணம் முடிக்கும் பணியிலிருந்து, இரண்டு நாடுகளுக்குச் சிண்டு முடிந்துவிடும் வேலைவரை செய்தார்கள். பாமரன் கடவுளுக்கு அடுத்துள்ளவர் பூசாரி, அவருக்கும் ஆண்டவனுக்குள்ள அபூர்வ சக்திகள் உண்டு. அவை ஆண்டவனால் அளிக்கப்பட்டவை என்று மனதார நம்பினான். காணிக்கைகள் பல செலுத்தினான், மனிதனின் நம்பிக்கை மீது தங்கள் வாழ்வுக் கோட்டையைக் கட்டிக்கொண்டார்கள் பூசாரிகள். நான் இரேக்க, ரோம குருமார்களை மட்டும் சொல்லவில்லை; வால்கா நதி தீரத்திலிருந்து கங்கைக்கரை வரையிலும் உள்ள குருமார் கூட்டத்தையெல்லாம் சேர்த்தே சொல்கிறேன். அவர்கள் எல்லாருமே கபட வேடதாரிகள் (Hypocrites) என்று

முதல் முதலாளி தோற்றம்

அந்தப்பொய்மடிப்பாலேயே குருமார் கூட்டம் மதத்தைக் கொண்டு பொருள் தேட முனைந்தது. என்று முதன் முதல் குரு பொருள் தேட முனைந்தானோ அன்று முதல் முதலாளி தோன்றினான். அன்று தான் முதலாளித்துவம் பிறந்தது, வளர்ந்தது.

இன்று குருமார்களுக்குமக்கள் அளிக்கிற மதிப்பு மட்டந்தான். புது மதிப்பீடு என்ற முறையை ஒட்டித்தான், இப்பொழுது அவர்களின் செல்வாக்கைக் குலைத்து விட்டார்கள் மக்கள்.

பள்ளிப்படிப்பும், நாட்டுநடப்பும்

கல்வித் துறையிலே தொடர்புள்ள துணைவேந்தர் அவர்களைக் கேட்கிறேன்; அறிவுத் துறையிலே நடமாடும் அனைவரையுமே கேட்கிறேன்; நமது கல்வித் திட்டம் வாழ்க்கையோடு ஒட்டியிருக்கிறதா? படிப்பது ஒன்று, நடப்பது ஒன்று! கல்லூரியிலே அட்லாஸ், வீட்டிலே பஞ்சாங்கம்! இரண்டுக்கும் போராட்டம்! இந்த நாட்டு அறிஞர்கள் திடமனதுடன் சொல்லட்டும், அட்லாஸ் தேவையில்லை, பஞ்சாங்கம், போதும் என்று!

தக்கக் காரணங் காட்ட முடியாவிட்டாலும், பிடிவாதத்துடன்! காலத்தோடு போராடட்டும்! விஞ்ஞானத்திற்கு எதிர்ப்பு முன்னணி அமைக்கட்டும்! இல்லாவிட்டால் அட்லாஸ்தான் வேண்டும் என்று சொல்லட்டும். இரண்டுக்கும் இடம் அளிப்பதுதவறு. கல்லூரியில் படிப்பது அமெரிக்காவைப்பற்றி, கனடாவைப்பற்றி, கிரிப்ஸ்

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]

உலகக்கூடம்....

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

கிறீங்க அண்ணாடம்! இது தெரிலீங்களே உங்களுக்கு?' என்றான் பக்கிரி.

'என்னடா பக்கிரி! என்ன கேலி வேற பண்ண ஆரம்பிச்சுட்டே?'

'இல்லெ எசமான்! கேலி இல்லெ எசமான்! உண்மையா சொல்றேன்! பத்திரிகிலே, ஒரு சங்கதி வந்தா, கருப்பா கோட்டையா உங்கத் தெரிவிலிருந்து வருவாங்களே, அவர்தான் சொன்னாங்க!' என்றான் பக்கிரி.

'இன்னான்னா சொன்னாரு? உங்கக் கதையெல்லாம் எழுதறத்துக்குத்தான் பத்திரிகை நடத்திருங்கண்ணு சொன்னாரு அவரு!'

'என்னுங்க எசமான்! கோபிச்சிக்கிறங்களே? பஞ்சாப்பிலே கவர்னர் பொண் ஜாதி, வாரத்திலே ஒரு நாள் ரேஷன் வாங்கிறதில் லேண்ணு தீர்மானிச்சுட்டாங்களாம்! அதெ, பத்திரிகைங்கள்ளாம் போட்டிருக்காம்! அவரு சொன்னாரு அப்படிண்ணு!' என்றான் பக்கிரி.

'அதுக்கும் நீ கேட்டதற்கும் என்னடா சம்மந்தம்?'

'ஒரு நாளக்கி ரேசன் வாங்காதவங்க பேரே பத்திரிகிலே வரும்போது, வாரத்துக்கு மூணு நாலு நாளு எண்ணெண்ணிக்கும் பட்டினியா கிடக்கிறமே, எங்கப் பேரையும போட்டுத் தானே ஆகணும் பத்திரிகக்காரருங் கண்ணு கேட்டேன் சாமி!' என்று முகமலர்ச்சியோடு கூறினான் பக்கிரி.

'போடா முட்டாளே! நீ ஏழைடா-பரம்பரப்பஞ்சடா-பட்டினி இருந்து இருந்து பழகியவண்டா! அந்தம்மா மவராஜி! கவர்னர் மனைவி! நீ என்னடா ஊரையா ஆளற, உன் மனைவி பேர பத்திரிகையிலே போட?'

'பெரிய இடத்துப்பெண் பட்டினி இருந்தா, அதற்குப பேர் தியாகமடா; அதனை பலர் புகழ்வார்களடா! உனனைப்போன்ற ஏழைகள் பட்டினியிலே கிடப்பது தலையெழுத்தடா—முன்செய்த காமமடா! பதவியிலே ஒரு நாள ரேஷனைவாங்குவதில்லைஎன்று பத்திரிகையிலே போட்டு விளம்பரப்படுத்தினால், இந்த நாட்டு ஆளவந்தார்களைப புகழ்வார்களாடா! ஏழைகள பலநாள் பட்டினியிலே கிடக்கிறார்கள் என்பதைப் பத்திரிகையிலே போட்டால், மற்ற நாட்டவர், இந்த நாட்டு அரசியலாரை மட்டமாக மதிப்பார்களடா! அட பக்கிர, பத்திரிகையிலே உங்கப்பேரு வராது, ஏன் பொழுதுபோககுற. போய் காலுகாசு சம்பாதிக்கற் றதெ பாரு!'

கருவூலத்திற்கு மட்டுமல்ல...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

திட்டம் பற்றி......! ஆனால் வீட்டிலே உலவுவது இருபத்தொரு உலகங்களும், இந்திரனும் சந்திரனும்! பஞ்சாங்க மூட்டையுமாக உள்ள தந்தைகளும், அட்லாஸ் ஏந்தியுள்ள மாணவனுக்கும் நடக்கிற போராட்டம் நமது கல்வித் திட்டத்திலே உள்ள கோளாறின் விளைவு! கல்லூரியில் நடப்பதை, படிப்பதை வாழ்க்கையில் ஓட்ட முடியவில்லை! வாழ்க்கையில் உலவுகிற நிகழ்ச்சிகளை எண்ணங்களை கல்லூரிப்படிப்பில் காண முடியவில்லை! இந்த நிலை மாறவேண்டும்! செயல்கள் புது மதிப்பீடு பெறவேண்டும்!

அரசியல்—பந்தாட்ட வேடிக்கை போன்றது.

இறுதியாக, அரசியலைப் பற்றியும் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பந்தாட்டத்தைப் பார்த்து இரசியுங்கள், அதில் நேரடியாக ஈடுபடாதீர்கள், என்பதைப் போலத்தான், அரசியலைப் பற்றி ஆராயுங்கள், ஆனால்நேரடியாக ஈடுபடாதீர்கள் என்கிறேன். அரசியலைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள் என்றால், நாட்டாண்மை நகராண்மைக் கழகத் தேர்தல்களிலே கலந்து கொள்ளுங்கள் என்றோ, கருத்து வேற்றுமை காரணமாகக் கல்லாலும் கட்டியாலும் அடித்துக் கொள்ளுங்கள் என்றோ சொல்லவில்லை. நாளை உங்களுக்கு இந்த நாட்டை ஆளும் பொறுப்பு வரலாம், நீங்கள் மந்திரியாகலாம். வெளிநாட்டு தூதுவர்களாகப் போகலாம், அரசியலையே ஆட்டிடும் பெரும் வீரராகலாம். ஆகவே அன்றாட அரசியல் நிகழ்ச்சிகளை அறிந்துதான் ஆகவேண்டும். தெரிந்துகொள்ளத்தான வேண்டும். அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் ஒருவர் கடைவீதியில நடந்து செல்கிறார் என்று வைத்துக் கொள்வோம. ஒரு பாமரன் பத்திரிகையிலே அடிபடுகிற மதிப்புக குறைந்த பொருளியல் சிக்கலை விளக்கும்படி கேட்டால், தெளிவாகச் சொல்லத்தெரிய வேண்டாமா? காஷ்மீர் களத்தைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டாமா? பர்மா நம எல்லையிலே உள்ளநாடு, ஆப்கானிஸ்தானம ஒரு பக்கத்து எல்லை, இவைகளைப்பற்றி அறிய வேண்டாமா? ஆகவேதான் அரசியலைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள் என்கிறேன்.

புதிய மதிப்பீடு—தேசபக்திக் குறைவைக் காட்டாது

கிரிப்ஸ் தன் நாட்டுப் பொருள் மதிப்பையே குறைத்துவிட்டார். அதனால் அவர் நாட்டுப்பற்றில்லாதவர்என்று சொல்லிவிடமுடியாது. கடவுள, மதம், கல்வி, அரசியல் எதற்கும் புது மதிப்பீடு செய்யுங்கள் என்றால் தேசபக்தி குறைந்து விட்டதென்று அர்த்தமில்லை. அப்படி மதிப்பீடு வேதே தேசபக்தியின் விளைவுதான!

படித்தவன்—பாமரன்: பிளவு நீங்க வேண்டும்

மாணவர்களே, நீங்கள் ஓய்வு காலங்களில் என்ன செய்வீர்களே எனக்குத்தெரியும். ஊரி னில் நானும் மாணவனாக இருந்திருக்கிறேன், கல்லூரியிலே கழித்த இன்ப விளைவுகளை எண்ணி மகிழ்வீர்கள், ஆனால் பாமரரைத திருத்தும் கடமை உங்களுடையது! இராமாயண பாடம் நடத்தும் தமிழ்ப்பண்டிதர் கூட, இராவணனுக்குப் பத்து தலைகள் என்று வைத்துக்கொள்ளுங்கள் என்பார். சைவ மெய்யன்பர் கூட முருகனுக்கு ஆறுதலைகள் இருந்தன என்பது கற்பனை என்று ஒத்துக் கொள்வார். இந்தக கருத்தை ஒரு கிராமத்துப் பாமரனிடம் சொல்லிப்பாருங்கள். பதில் நிச்சயமாகச் சொற்களாக இருக்காது, கற்களாகவே தான் இருக்கும்! அவனைத் திருத்தியாகவேண்டும். நகரத்திற்கும் கிராமத்திற்கும்பாலம் போட்டு இணைக்க வேண்டும். படித்தவர்களைப் பாமரன் தன்னைச் சுரண்டிப் பிழைக்கும் கூட்டம என்று கருதுகிறான். இரு கூட்டத்தாருக்கும் இடையிலே உள்ள பிளவை பேதத்தை ஒழிக்கவேண்டும்.

பொருட்காட்சி நடத்துதல்

ஏன் இங்குள்ள மாணவர்கள் ஒரு குழு அமைத்து அதற்குத் துணை வேந்தரைத் தலைவராகக் கொண்டு ஒரு பொருட்காட்சி நடத்திப் பட்டிக்காட்டாருக்கும் பகுத்தறிவை, உலக அறிவைப் பெருக்கக் கூடாது? எண்ணெயும், சீயக்காயும் இரு கரங்களிலே ஏந்தி ஒரு நாள் குளியலிலே கிராமச் சீர்திருத்தம் செய்ய முனையும் பழமைப் போக்கிலே எனக்குநம்பிக்கையில்லை! ஏனெனில இந்தத் துறையில நம்மைக் காட்டிலும் கிராமத்தார் அனுபவம் அதிகம் உள்ளவர்கள். இந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே பொருட்காட்சி நடத்தினால், கிராமத்தினருக்கு இரவிவர்மா தீட்டியுள்ள சீதையும், இராமனும் உள்ள படங்களையோ, இலட்சுமி தாமரையிலே வீற்றிருக்கும் காட்சியையோ காட்டவேண்டியதில்லை. அவை அவர்களுக்குத் தெரிந்தவை-மறக்க வேண்டியவை! நீங்கள் சாக்ரடீசின் படத்தைக் காட்டலாம், அவர் நஞ்சருந்திய நிலையை விளக்கலாம், கலிலியோவைக் காட்டலாம், நமக்கு இரயிலை, தந்தி முறையை, வானவூர்தியை, வானொலியைக் கொடுத்த விஞ்ஞானிகளின்படங்களைக்காட்டலாம்; அவர்களது சரிதைகளை எடுத்துச்சொல்லலாம். அமெரிக்கா உள்ள இடத்தை, தென் ஆப்ரிக்காவின் இருப்பிடத்தைக் காட்டலாம்; புராணகாலப்புளுகுக்கற்பனைகளை ஒருபக்கமும், விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளை வேறொரு பக்கமும் வைத்து இரண்டிற்கும் உள்ள வேறுபாடுகளைச் சொல்லலாம; களிமண்ணினால் உலகில உள்ள இன உருவங்களை அமைக்கலாம்; விளக்கலாம்; இப்படியெல்லாம் செய்தால் அடுத்த ஆண்டு மாரியம்மன் திருவிழாவிற்குக் கூட்டம் இருக்காது! இங்கு வந்துவிடும் அந்தக்கூட்டம்! ஆம், நமக்குக் தெரிந்தவைகளை அவர்களுக்குச் சொல்ல வேண்டும். அவர்களுக்குத் தெரியாதவைகளை நாம் தெரிய வைக்கவேண்டும்; இதை மாணவர்கள் செய்ய வேண்டும்.

என்று கூறி சுமார் $1\frac{1}{4}$ மணி நேரப்பேச்சை முடிக்க, துணை வேந்தர் முடிவுரைகூற, நன்றி நவிலலுடன கூட்டம இனிது முடிந்தது.

[பிறகு தமிழ்ப் பேரவைத் துவக்க விழாவில் பேசிய பேச்சு நாளை வெளிவரும்.]

இனி நடப்பவை

சென்னை— பெத்துநாய்க்கன் பேட்டை- பெத்துநாய்க்கன் பேட்டை திராவிட கழக எதிர்கால அமைப்பு முறைபற்றி ஆவன செய்ய மேற்படி கழக உறுப்பினர்களின் ஆலோசனைக் கூட்டம ஒன்று 29-9-49வியாழன்இரவு 7 மணிக்கு சென்னை பெத்துநாய்க்கன் பேட்டை லாயர் சின்னதம்பி தெரு 4-வது எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் இதனையே அழைப்பாகக் கருதித் தவாது வரவேண்டுகிறேன் எனத் தலைவர் தோழர் டி. பாமசிவம் எழுதுகிறார்.

* * *

சென்னை— தோழர்கள் பா. இலட்சுமணன்- மு. முனியம்மாள் வாழ்க்கை ஒப்பந்தம் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள தலைமையில, 2-10-49 ஞாயிறு மாலை 4-30 மணிக்கு பெரம்பூர், பந்தர் தோட்டம் புதிய தெரு 2-ம் எண் இல்லத்தில் நடைபெறும. அதுபோது தோழர் க. அன்பழகன் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

ஆம்பூர்— ஆம்பூர் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம 2-10-49 ஞாயிறு காலை 10 மணிக்குத் தோழர் சுந்தராசன் அவர்கள மண்டியில (54-ம் நம்பர் இல்லம்; நடைபெறும. கழக உறுப்பினர்கள் எல்லோரும தவறாமல் வரவேண்டிக்கொள்கிறேன் எனத்தோழர் ஐ. பெ. கோவிந்தன் எழுதுகிறார்.

* * *

கண்டியூர்-கண்டியூர்திராவிடமுன்னேற்றக கழக அமைப்புக் கூட்டம 9-10-49 ஞாயிறு மாலை 6-மணிக்குக் கடைத்தெரு எம். அலாவுதீன் அவர்கள் கடையில் நடைபெறும். திராவிட முன்னேற்றக் கழக வளர்ச்சியில் கருத்துடைய அனைவரும கலந்துகொள்ளும்படியாகக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். எனத் தோழர் எம். ஆர். கோவிந்தராஜு எழுதுகிறார்.

* * *

பாவூர்சத்திரம்— 16-10-49 ஞாயிறு காலை 11-மணிக்கு பாவூர் சத்திரம திராவிட முன்னேற்றக கழகம் அமைக்கப்படும. திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர விரும்புவோர் இதையே அழைப்பாகக்கொண்டு அன்று கூட்டத்திற்கு வரும்படியாகக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். எனத் தோழர் எ. நாடாக்கண்ணு எழுதுகிறார்.

* * *

சிதம்பரம்:—சிதம்பரம் நகர திராவிட முன்னேற்றக கழகத்தின் அமைப்புக கூட்டம் 2-10-49 ஞாயிறு மாலை 5-மணிக்கு மாரியம்மன் தெரு 9ம் எண் இல்லத்தில் நடைபெறும. திராவிட முன்னேற்றக்கழகத்தில் ஆர்வமுள்ள தோழர்கள் அனைவரும வந்து கலந்து கொள்ள வேண்டுகிறேன். எனத் தோழர் மு. க. சுந்தரம அவர்கள் எழுதுகிறார்கள்.

பிறப்பு

தோழர் க. அன்பழகன் அவர்கள் துணைவியார் தோழியார் வெற்றிச் செல்வி அம்மையாருக்கு 26—9—49 திங்கள் காலை 6-மணிக்குப் பெண் மகவு பிறந்தது. தாயும், சேயும் நலம்.

குருட்சேத்திரமாகிறது...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

முறைகளும் பயனளிக்க வில்லை. அடக்கு முறைகளின் எண்ணிக்கைக் கணக்கில் கூடினதேயன்றி, நாட்டு மக்களின் வாழ்வு வளமாகவில்லை-ஆளவந்தார்கள் மீது ஏற்பட்டுள்ள அதிருப்தியும் அழிந்து விடவில்லை. குறைந்து விடவும் இல்லை. பெருகிக் கொண்டே வருகிறது.

இல்லாமை-வேலை இல்லாமை-உண்ண உணவில்லாமை-குடியிருக்கக் குச்சில்லாமை-பேச உரிமை இல்லாமை-நடமாட உரிமை இல்லாமை-கூட உரிமை இல்லாமை - மனிதத்தன்மை இல்லாமை-வாழ்விலே பற்றில்லாமை-இல்லாமை-இல்லாமை-இல்லாமை-எல்லாம் இல்லாமை இந்த ஆளவந்தார்கள ஆட்சியில்.

பஜனை மடப்பயிற்சி உடையவர்கள கரங்களில, நாடு சிக்குமானால், நல்லாட்சியா இருக்கும் அந்த நாட்டில! நாடு, காடாகியன்றோ காட்சி அளிக்கிறது!

இதோ பாருங்கள், காங்கிராஜ்யத்தின் கண்கொள்ளாக் காட்சியை! அதிகார ஆதிக்கத்தின் போக்குக்குப் பணியும் பலப்பல சங்கங்களின் பட்டியலைப் பாருங்கள்!

(1) மதராஸ் எலக்டிரிக் டிராம்வே தொழிலாளர் சங்கம்.

(2) மதராஸ் எலக்டிரிக்சப்ளை கார்ப்பொரேஷன தொழிற் சங்கம்.

(3) மதராஸ் கார்ப்பொரேஷன் தொழிற் சங்கம்.

(4) மதராஸ் துறைமுகத் தொழிற சங்கம்.

(5) பின்னி மீச் எஞ்சினியரிங் வொர்க்ஸ் தொழிற சங்கம்.

(6) தென்னிந்திய இரயில்வே தொழிற சங்கமும், அதன் கிளைகளும்.

(7) கிசான் சங்கங்கள் அனைத்தும்.

(8) திருச்சி உறையூர் சுருட்டுத் தொழிற் சங்கம.

(9) திருச்சி—திருவரங்கம் முனிசிபல் தொழிற் சங்கம்.

(10) மதுரை நெசவாலைத் தொழிற் சங்கம்.

(11) கோவை நகரிலும், ஜில்லாவிலும் உள்ள நெசவாலைத் தொழிற் சங்கம்.

(12) கோவை சிமெண்டு ஆலைத் தொழிற் சங்கம்.

(13) கோவை புரூக் பாண்டு தேயிலைத் தொழிற் சங்கம.

(14) விசாகப் பட்டினம் சிந்தியா கப்பல கட்டும் தொழிற் சங்கம்.

(15) இராஜ மகேந்திரிஜாட்டு தொழிற் சங்கம.

(16) விஜயவாடா அச்சுத் தொழிலாளர் சங்கமும், அதன் கிளைகளும்.

(17) ஆந்திர விவசாயத் தொழிலாளர சங்கமும், அதன் கிளைகளும்.

(17) ஆந்திர ரயத்துகள் சங்கமும், அதன் கிளைகளும.

(18) விக்கிரம சிங்கபுரம் நெசவாலை தொழிற்சங்கம்.

(19) திண்டுக்கல் தோல்பதனிடும் தொழிற்சங்கம்.

இவைகளுடன்,

கம்யூனிஸ்ட் கட்சி

அதிகார ஆதிக்கத்தின்போக்கிற்கு நல்லஇரையாகிறது27-9-49

முதல் காரணமுண்டாம் இதற்கு நீதிபதிகளின் தீர்ப்பு இருக்கிறதா, இதனை மெய்ப்பிக்கத் தெரியாது. ஆளவந்தார்களின் குற்றச்சாட்டுதான் நமக்கு ஆதாரம்.

மூலகுற்றவாளிமட்டும் தண்டிக்கப்படவில்லை. அவன் நிழல் படுகிறவர்கள் அனைவரும் தண்டிக்கப்படுகிறார்கள, ஆளவந்தார்களால. பெற்றோரின் குற்றத்திற்கு, பெற்றோரை மட்டுந்தான் தண்டிக்கவேண்டும், என்ற தர்மம் புறக்கணிக்கப்பட்டு, பிள்ளை குட்டிகள், உற்றார் உறவினர் அனைவரையும் தண்டிக்கப்படுகிறது, இராமராஜ்யத்தில-காந்திராஜ்யத்தில். அகிம்சா தத்துவம் சிறந்து, புதுபொருள், தரப்படுகிறது, ஆளவந்தார்களால்.

கொலை—கொள்ளை—; எந்த உயர்ந்த லட்சியத்தை அடைவதற்கு சாதனமாகக் கொள்ளப்படுவதும காட்டுமுறை—கண்டிக்கத்தக்கது என்பதுதான், நமது நோக்கம்—அசைக்க முடியாத நம்பிக்கை. அம்முறைகளைக் கம்யூனிஸ்டுகள் கையாளுவதாக இருந்தாலும் சரி, காவலர்கள், ஆட்சியின் அவசியத் தேவை—என்று மயக்க உணர்ச்சியில் பலாத்காரத்தை மேற்கொண்டாலும், குற்றம குற்றமேதான்.

குல்லாக்காரர்கள், கொலை நாற்றம் வீசக்கூடிய எதேச்சாதிகாரத் தத்துவார்த்தங்களை கூறிவருகின்றனர். அந்தப் பித்தலாட்டங்கள அம்பலமாக்கப்படுகின்றன ஆளவந்தார்களால. கீதையின் புதைபொருள நடைமுறையில நடத்திக்காட்டுகிறார்கள நாட்டாளுகிறவர்கள். காங்கிராஜ்யம் குருட்சேத்திரமாகிறது. மக்களாட்சிப் பேச்சில பாசிசம் கோரத் தாண்டவம் புரிகிறது.

கம்யூனிஸ்டுகள, கண்களுக்குத் தெரியும் அளவில், வெளியுலகில் இனி காணமாட்டார்கள. ஆனால், மக்கள் மனதிலே அவர்களின் இலட்சியங்கள் என்றென்றும் நிலைத்து நிற்கும்.

விதை நல்லதாக இருந்தாலும், விண்ணிலே பயிர் செய்ய முடியாது. கம்யூனிஸ்டு கருத்துக்கள் தூவப்படும வகையில, மக்கள வாழ்வில் வறுமை நிரம்பி இருந்தால, கம்யூனிஸ்டு கட்சியை சட்டவிரோதமானதாகத்தடுத்து விடுவதால் மட்டும பயன் விளையுமா? பெயரளவில் கட்சி மறையலாம்; அதனால ஆளவந்தார்களின அச்சம நீங்கிவிடப் போவதிலலை, மக்களின் அதிருப்தியும மறைந்து விடாது!

அதிகார ஆதிக்கத்தின் போக்குக்கு இதமேலும எவை எவை பலியாக்கப் படுமோ!

அறிவிப்பு

ரெடிமேட் முட்டை பவுடர், முட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கும் அபாய்த நீத்திரை தருகிறது. சாம்பிள் புல 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும். G பழனியப்ப முதலியார், மதுரை.

ஏஜெண்டுகளுக்கு

அதிகப்படி பிரதிகள் தேவைப்படும் ஏஜெண்டுகள் முன் பணம அனுப்பினாலன்றி கவனிக்கப்படமாட்டாது.

—"நிர்வாகி"

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45. Muthumari Chetty Street. Madras-1.